# நடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகள் அக நன்னெறிகள் விசாரணைகளின் மீதான கொள்கை

ETHICS & LEGAL COMPLIANCE |

ISSUED: September 21, 2021 – REVISED: April 3, 2024

## அறிமுகம்

Magna International Inc. மற்றும் அதன்கீழ் இயங்கும் அனைத்துக் குழுக்கள், பிரிவுகள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய பிற செயல்பாடுகளில் (ஒட்டுமொத்தமாக, "Magna") நன்னெறிகள் மற்றும் சட்ட இணக்கக் கவலைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை இந்தக் கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது. இந்தக் கொள்கையானது பணியாளர்கள், சுயாதீன ஒப்பந்ததாரர்கள், அதிகாரிகள், இயக்குநர்கள், சப்ளையர்கள், ஆலோசகர்கள் மற்றும் முகவர்கள் (ஒட்டுமொத்தமாக, “Magna சார்ந்த நபர்கள்”) உட்பட Magna-இன் சார்பாகச் செயல்படும் அனைத்து நபர்களுக்கும் அல்லது MAGNA உடன் உறவு வைத்திருக்கும் அனைவருக்கும் பொருந்தும்.

## உபயோகம்

இந்தக் கொள்கை நெறிமுறைகள் மற்றும் சட்ட இணக்கக் கவலைகள் தொடர்பாகப் பெறப்படும் அறிக்கைகளுக்குப் பொருந்தும். Magna பணியாளர் சாசனத்தின் மீதான சாத்தியமான மீறல்கள் அல்லது மனித வளங்கள் அல்லது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இயல்பின் பிற உள்ளூர் விஷயங்கள் குறித்து உள்ளூர்ச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப விசாரிக்கப்படும் கவலைகளுக்கு இந்தக் கொள்கை பொருந்தாது.

இந்தக் கொள்கைக்கும் பொருந்தக்கூடிய சட்டத்திற்கும் இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சட்டத்தின் தேவைகள் மேலோங்கும்.

## உறுதியேற்றல்

அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நேர்மையாகவும் ஒருமைப்பாட்டுடனும் செயல்பட Magna உறுதிபூண்டுள்ளது. எனவே அனைத்து Magna சார்ந்த நபர்களும் நடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகள் ("கோட்பாடு") அல்லது கோட்பாடு தொடர்பான எந்தவொரு கொள்கைகளின் மீறல்கள் குறித்தும் உடனடியாக **வெளிப்படையாகப் பேச** வேண்டும் மற்றும் ஏதேனும் கவலைகளைத் தெரிவிக்க வேண்டும். கிடைக்கக்கூடிய புகார் அளிக்கும் சேனல்கள் பற்றி மேலும் அறிய கீழே பாத்க்கவும்.

Magna இடம் தெரிவிக்கப்படும் கவலைகளை அது தீவிரமாக எடுத்துக்கொள்வதுடன், விசாரணையால் அடையாளம் காணப்படும் எந்தவொரு தவறான நடத்தையையும் சரியான நேரத்தில், நியாயமான மற்றும் சீரான முறையில் விசாரித்துச் சரிசெய்வதற்கும் உறுதிபூண்டுள்ளது.

இத்தகைய கவலைகள் குறித்து பழிவாங்கும் பயம் இல்லாமல் எழுப்பப்படும் கலாச்சாரத்தை ஆதரிப்பதிலும் Magna உறுதியாக உள்ளது. அந்தக் காரணத்திற்காக, Magna-இன் பழிவாங்கலுக்கு எதிரான கொள்கையானது நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் ஒரு கவலையை எழுப்பும் எவரும் பழிவாங்கப்படுவதைத் தடை செய்கிறது. யாரும் கவலைகளை எழுப்புவது தொடர்பாக அச்சுறுத்தப்படுவதோ அல்லது தடுக்கவோ செய்யும் முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்படாது, எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையும் ஒரு தீவிரமான விஷயமாகக் கருதப்பட்டு, வேலையிலிருந்து விலக்கப்படுவது உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் வரை மேற்கொள்ளப்படலாம்.

## MAGNA சார்ந்த நபர்களின் பொறுப்புகள்

கீழே விவாதிக்கப்பட்ட பலதரப்பட்ட புகாரளித்தல் சேனல்களில் ஒன்றைப் பயன்படுத்தி நெறிமுறைகள் அல்லது சட்ட இணக்கத்திற்கு சந்தேகத்திற்கிடமான மீறல்களை Magna சார்ந்த நபர்கள் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். நடத்தை பற்றிய விரிவான விளக்கம் உட்பட, கவலையைப் பற்றி முடிந்தவரை கூடுதல் தகவல்கள் புகாரில் இருக்க வேண்டும்; நடத்தையின் இடம், தேதி மற்றும் நேரம் (அது நடந்து கொண்டிருக்கிறதா என்பது உட்பட); உடல் ரீதியான தீங்கு, பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான வாய்ப்பு உள்ளதா[1] அல்லது உடனடி நடவடிக்கைக்கான பிற காரணங்கள்; சாட்சிகள் அல்லது தொடர்புடைய பிற நபர்களின் அடையாளங்கள்; மற்றும் Magna விசாரணையை முன்னேற்ற உதவியாக இருக்கக்கூடிய தகவல்களின் மூலங்கள், ஆவணங்கள் அல்லது ஆதாரங்கள். புகாரளிப்பவர்கள் தங்கள் கிளைம்களுக்குத் துணைபுரியும் வகையில் ஏதேனும் கூடுதல் தகவல்கள் மற்றும் சான்றுகள் (இருப்பிடம்) கேட்கப்பட்டால் அவற்றுக்கு உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். சரியான நேரத்தில் ஒத்துழைப்பை வழங்கத் தவறினால் அல்லது விசாரிக்கும்போது விவரங்களைத் தர தவறினால் அது விசாரணை கோப்பை மூடுவதற்கு வழிவகுக்கும்.

[1] இத்தகைய அவசரக் காலங்களில், Magna அதன் பணியாளர்கள், சுயாதீன ஒப்பந்ததாரர்கள், சப்ளையர்கள் மற்றும் முகவர்கள் உள்ளூர் அவசரச் சேவைகளை (911-ஐ டயல் செய்வது போன்றவை) தொடர்புகொள்ளுமாறு ஊக்குவிக்கிறது.

கேட்டுக்கொள்ளப்படும்போது, Magna சார்ந்த நபர்கள் மீறல்கள் குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும். ஒரு பணியாளர் Magna புலன் விசாரணை குழுவிற்கு முழுமையான அல்லது சரியான நேரத்தில் ஒத்துழைப்பை வழங்க மறுத்தால், அல்லது விசாரணையில் குறிப்பிட்டால் அல்லது செலவாக்கைப் பயன்படுத்தினால் அவர்மீது பணிநீக்கம் உட்பட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். ஒரு சுயாதீன ஒப்பந்ததாரர், சப்ளையர் அல்லது முகவர் ஒத்துழைக்க மறுப்பதால் Magna உடனான அவர்களின் வணிக உறவு நிறுத்தப்படலாம்.

## புகாரளிக்கும் சேனல்கள்

Magna பணியாளர்கள் சந்தேகத்திற்கிடமான மீறல்களை நிறுவனத்திற்குள் புகாரளிக்க வேண்டும் மேலும் புகாரளிக்க பல்வேறு சேனல்கள் உள்ளன. Magna ஹாட்லைன் என்பது Magna சார்ந்த நபர்கள் பழிவாங்கும் பயம் இல்லாமல் Magna-இன் கொள்கைகளை மீறுவது பற்றிய கவலையை இரகசியமாகவும் அநாமதேயமாகவும் தெரிவிக்க அனுமதிக்கும் ஒரு சேனலாகும். பணியாளர்களின் புகார்கள் தங்கள் மேற்பார்வையாளர்கள் மற்றும்/அல்லது பிரிவில், குழுமத்தில், கார்ப்பரேட் அளவில் Magna நிர்வாகக்குழு உறுப்பினரிடம் (அதாவது, Magna-இன் "வெளிப்படையான கருத்துத் தெரிவித்தல்" செயல்முறை) அல்லது Magna-இன் அகத் தணிக்கை, சட்டம், மனித வளங்கள் அல்லது அறநெறிகள் மற்றும் சட்ட இணக்கத் துறைகளிடம் தெரிவித்தல் உள்ளிட்ட சேனல்களில் மற்ற சேனல்கள் வழியாகவும் கவலைகளைத் தெரிவிக்கலாம்.

சில நாடுகளில், அரசாங்கம் அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் விசில் ப்ளோயிங் பொறிமுறையின் மூலம் மீறல்களை நிறுவனத்திற்கு வெளியே புகாரளிக்கலாம். உங்கள் நாட்டில் சட்டம் அனுமதிக்கும் கட்டுப்பாட்டு ஆணையத்தின் விசில் ப்ளோயிங் பொறிமுறையைப் பயன்படுத்துவதிலிருந்து இந்த கொள்கை உங்களைத் தடுக்காது.

## தனியுரிமை, இரகசியத்தன்மை, முன்னுரிமை மற்றும் அநாமதேயம்

புகாரளிப்பவர்களின் இரகசியத்தன்மை மற்றும் அநாமதேயமானது வைக்கப்படும், அவை தெரியும் நிலையில் இருந்தால் அவர்களின் அடையாளங்களைப் (இந்த விசாரணையில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் உட்பட) பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பொருந்தும் சட்டத் தேவைகள் இல்லையெனில் தேவைப்படும் அளவு தவிர இரகசியத்தன்மை மற்றும் அநாமதேயத்திற்கு மதிப்பளிக்கப்படும்.[2] புகாரளிப்பவர்கள் மற்றும் விசாரணைச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள மற்ற நபர்களின் தனிப்பட்ட தரவானது பொருந்தும் சட்டம் மற்றும் எங்கள் அகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் தரவுத் தனியுரிமை குறித்த வழிகாட்டுதல்களின்படி செயலாக்கப்படும்.

Magna நிறுவனமானது சட்டத்தால் பொருத்தமானதாகவும் அனுமதிக்கப்பட்டதாகவும் கருதும் அளவிற்கு விசாரணைச் செயல்முறை மற்றும் தொடர்புடைய தகவல்தொடர்புகளின் (வாய்மொழி அல்லது எழுத்துப்பூர்வ, மின்னணு அல்லது வேறு விதங்களில்) இரகசியத்தன்மையைப் பராமரிப்பதில் வலுவான ஆர்வம் கொண்டுள்ளது. சட்டப்பூர்வச் சலுகை அல்லது மற்ற குற்றவியல் விதிவிலக்கு உட்பட்ட தகவல்தொடர்புகள் மீதான இரகசியத்தன்மையும் இதில் அடங்கும் (எனவே, சட்ட நடவடிக்கைகளால் வெளிப்படுத்துவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறது). விசாரணை தொடர்பான தகவல்தொடர்புகளில் விசாரணைகளில் ஈடுபடும் அனைத்து நபர்களும்

[2] சில அதிகார வரம்புகளில் அநாமதேய அறிக்கையிடல் முறைகளைப் பயன்படுத்துவதில் வரம்புகள் இருக்கலாம். Magna ஹாட்லைன் அமைப்பின் அநாமதேயத்தன்மை அல்லது Magna ஹாட்லைன் அழைப்புகளை அநாமதேயமாக வைத்திருப்பதற்கான Magna-இன் கடமை பற்றிய கேள்விகளை குழுமம் மற்றும் / அல்லது அந்த பிராந்தியத்திற்குப் பொருத்தமானச் சட்ட ஆலோசகருக்கு அனுப்ப வேண்டும். Magna அல்லாத தரப்பினர் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

இரகசியத்தன்மை மற்றும் சலுகையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று Magna எதிர்பார்க்கிறது.

நிறுவனத்தின் சார்பாகப் பேசுவதற்கு Magna-ஆல் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் அல்லது முகவர்கள் மட்டுமே விசாரணைச் செயல்முறை தொடர்பாக மூன்றாம் தரப்பினருடன் தொடர்பு கொள்ளலாம். இந்தக் கொள்கை பணியாளர்கள் தங்கள் சொந்த, தனிப்பட்ட திறன்களில் அரசு நிறுவனங்களுடன் அல்லது கட்டுப்பாட்டு ஆணையங்களுடன் தொடர்புகொள்வதைக் தடுக்காது.

## மேற்பார்வையிடுதல் மற்றும் புகாரளித்தல்

Magna இயக்கக் கவுன்சில் ("MCC") அறநெறிகள் மற்றும் சட்ட இணக்கத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் மேற்பார்வை செய்கிறது. MCC ஆனது அறநெறிகள் மற்றும் சட்ட இணக்கத் விசாரணைகளின் மேற்பார்வையைப் புலனாய்வு மேற்பார்வைக் குழுவிடம் ("IOC") ஒப்படைத்துள்ளது. IOC-இல் Magna மேலாளர்கள் இருப்பர், அவர்கள் காலாண்டு அடிப்படையில் MCC-க்கு அறிக்கை அளிக்கிறார்கள். பிரத்யேகப் புலனாய்வு நிர்வாகிகள் ("நிர்வாகிகள்") ஆதரவுடன் IOC, இந்தக் கொள்கை மற்றும் எந்தவொரு தொடர்புடைய நடைமுறைகள் அல்லது வழிகாட்டுதல்களுடன் பொருந்தக்கூடிய அனைத்து அக விசாரணைகளும் சரியான நேரத்தில், நியாயமான மற்றும் நிலையான முறையில் செயலாக்கப்படுவது, சரிசெய்யப்படுவது மற்றும் நிறுவனத்தில் அறிக்கையளிக்கப்படுவதை நிர்வகித்து மேற்பார்வையிடுகிறது.

அதிக அபாயகரமான விசாரணைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்கள், அகத் தணிக்கை மூலம் Magna International Inc. இயக்குனர்கள் குழுவின் தணிக்கைக் குழுவுக்குத் தொடர்ந்து தெரிவிக்கப்படுகிறது.

## செயல்பாடு (வழக்கை ஏற்றல்)

Magna ஹாட்லைன் மூலம் தாக்கல் செய்யப்படும் புகார்கள் ஒரு சுயாதீன மூன்றாம் தரப்பினரால் பெறப்பட்டு, பின்னர் நிர்வாகிகளுக்கு (வழக்கு ஆவணங்களைப் பெற்று, விசாரணை செயல்முறையைத் தொடங்குபவர்கள்) அனுப்பப்படுகின்றன. மூன்றாம் தரப்பானது ஒரு மைய தரவுத்தளத்தில் குற்றச்சாட்டுகளின் ஆவணங்களைச் சேமிக்கிறது, இதன்மூலம் இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள பதிலளிப்புச் செயல்முறையைத் தொடங்குகிறது. மூன்றாம் தரப்புப் பணியாளர்கள் 24 மணிநேரமும், வருடத்தின் 365 நாட்களும் வேலை செய்வர், மேலும் 20-க்கும் மேற்பட்ட மொழிகளில் தொடர்புகொள்ளலாம்.

பிற சேனல்கள் மூலம் தாக்கல் செய்யப்படும் புகார்கள் சரியான நேரத்தில் நிர்வாகிகளுக்கு அனுப்பப்பட வேண்டும், அவர்கள் குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்தி, அதன்மூலம் இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள விசாரணை செயல்முறையைத் தொடங்குவர்.

## சிறந்த விசாரணை நடைமுறைகள்

அகத் தணிக்கை, கார்ப்பரேட் பாதுகாப்பு, சட்டம், செயல்பாடுகள் அல்லது புகார் தொடர்புடைய செயல்பாட்டுக் குழு உட்பட Magna-இல் உள்ள செயல்பாட்டுத் துறைகளின் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. விசாரணைக்குத் ("முன்னணி") தலைமை வகிக்கும் செயல்பாட்டுத் துறையானது புகாரின் விஷயம் மற்றும் ஆரம்ப வழக்கு மதிப்பீட்டின்போது மதிப்பீடு செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளின் தீவிரத்தைப் பொறுத்து நிர்வாகிகளால் தீர்மானிக்கப்படுகிறது. விசாரணை செயல்முறைகளுக்கு உதவ Magna வெளி வளங்களையும் (உதாரணமாக, வெளி சட்ட ஆலோசகர்கள்) பயன்படுத்தலாம்.

விசாரணையைத் திட்டமிடுதல், அனைத்து விசாரணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் அக அறிக்கையிடல் ஆகியவற்றுக்குத் தலைவர்கள் பொறுப்பாவார்கள். விசாரணை நடவடிக்கைகளைப் போதுமான அளவில் மற்றும் சரியான நேரத்தில் நிறைவேற்றுவது நிர்வாகிகளால் கண்காணிக்கப்படுகிறது. அவ்வப்போது, இந்தக் கொள்கைக்கு ஏற்ப

விசாரணைகளை மேற்கொள்வதற்கான சிறந்த நடைமுறைகளின் வழிகாட்டுதல்களை IOC நிறுவலாம்.

சரியான நேரத்தில் விசாரணைகளை முடித்தல் மற்றும் அவற்றின் நிலை மற்றும் முடிவுகளைப் பற்றிய அக அறிக்கையை அளித்தல் ஆகியவை ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டுகளைச் சரிசெய்ய என்ன நடவடிக்கைகள் தேவை என்பதை நிர்ணயிப்பதற்காக நிர்வாகத்தை அனுமதிப்பதற்கு மிகவும் முக்கியமாகும். வழக்கு தொடர்பான தகவல்களுக்கான அணுகல் நியமிக்கப்பட்ட Magna பணியாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

விசாரணைச் செயல்முறை முழுவதும் புகாரளிப்பவருடன் தொடர்ந்து தகவல்தொடர்பு கொள்ளப்படும். குற்றச்சாட்டுகளை ஆதரிக்க கூடுதல் தகவல்கள் அல்லது ஆதாரங்களைக் கோர, தலைவர்கள் புகாரளிப்பவரைத் தொடர்பு கொள்ளலாம். புகாரளிப்பவர்களுக்கு விசாரணையின் நிலை மற்றும் விசாரணை முடிவானது சரியான நேரத்தில் அறிவிக்கப்படும்.

## நிவாரண நடவடிக்கை

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ), அந்த நடத்தையை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளைத் தீர்மானிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற நடத்தைகளைத் தடுப்பதற்கும் Magna-இன் நிர்வாகமே பொறுப்பாகும். நிவாரண நடவடிக்கையின் நோக்கமானது முறையற்ற நடத்தையை நிறுத்துவதும் எதிர்காலத்தில் இது மீண்டும் நிகழாமல் தடுப்பதும் ஆகும். நிவாரண நடவடிக்கைகளில் பின்வருபவை (வரம்பு இல்லாமல்) இருக்கலாம்:

- அகக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துதல், மேம்படுத்துதல் அல்லது சரிசெய்தல்;
- பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், இடைநீக்கம் செய்தல் அல்லது பணிநீக்கம் செய்தல்;
- விற்பனையாளர்களுடனான உறவை நிறுத்துதல்;
- பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் (அல்லது மீள்பயிற்சியளித்தல்);
- சட்ட அமலாக்கத் துறையிடம் புகாரளித்தல்; அல்லது
- சேதங்களுக்காக வழக்குத் தொடர்தல்.

## நிர்வாகப் பொறுப்புகள்

பணியாளர்களைப் போலவே Magna-இன் நிர்வாக உறுப்பினர்களும் மேலே விவாதிக்கப்பட்ட பல்வேறு புகாரளித்தல் சேனல்களில் ஒன்றைப் பயன்படுத்தி தவறான நடத்தையைப் பற்றிய சந்தேகத்திற்குரிய அனைத்துச் சம்பவங்களையும் உடனடியாகப் புகாரளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முடிந்த போதெல்லாம், விசாரணையின் முன்னேற்றம் குறித்து நிர்வாகத்திற்குத் தொடர்ந்து தெரிவிக்கப்படும். இருப்பினும், விசாரணையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட எந்தவொரு பணியாளரும் வழக்கு விவரங்களை அணுகுவதிலிருந்து தடைசெய்யப்படுவார்கள்.

எந்தவொரு விசாரணையும் முடிந்தபின், நிவாரண நடவடிக்கையை மேற்கொள்வதற்காகத் "தெரிந்துகொள்ள வேண்டியவை" குறித்த உண்மைகள் நிர்வாகத்திடம் தெரிவிக்கப்படும், குறிப்பாக பணியாளர் ஒழுக்கம் அல்லது நிதி இழப்புகளை மீட்பது பரிந்துரைக்கப்படும் சூழ்நிலைகளில் அல்லது அகக் கொள்கைகள், நடைமுறைகள், அல்லது பிற கட்டுப்பாடுகள் திருத்தப்பட வேண்டிய அல்லது அதிகரிக்க வேண்டிய சூழ்நிலைகளில் தெரிவிக்கப்படும்.

## மேலும் தகவல்களுக்கு

**மேலும் தகவல்களுக்கு, துணைத் தலைவர், நன்னெறிகள் & தலைமை இணக்க அலுவலர் அல்லது துணைத் தலைவர், அகத் தணிக்கை ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.**

---

| | |
|---|---|
| Issued: | September 21, 2021 |
| Revised: | April 3, 2024 |
| Next Review: | Q1 2024 |
| Issued By: | Ethics & Legal Compliance |
| Approved By: | Magna Compliance Council |